# கழுகின் சத்தம்

அக்டோபர் 28, 2023

2



அவ்விதமான மனிதர், இரகசியமாக விசுவாசித்து, தாழ்மையாக இருந்து கொண்டு, கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-1231 – வெளிப்படுத்தின விசேஷம், நான்காம் அதிகாரம் பாகம் I

17 அநேக சமயங்களில் ஜனங்கள் தவறாக புரிந்துகொள்கின்றனர்.

**எனவே அவர்கள், "சகோதரன் பிரான்ஹாம் அவர்களே, நீங்கள்—நீங்கள் முன்பு வழக்கமாக போகிற இடங்களுக்கெல்லாம், மற்ற ஊழியக்காரர்கள் செய்வது போல், நீங்கள் போகிறதில்லையே" என்று கூறுகிறார்கள்.**

ஒரு பாடத்தை நான்— நான் கற்றுக் கொண்டேன்.

**நான் வேதத்திலிருந்தும், நமது கர்த்தரிடத்திலிருந்தும் கற்றுக்கொண்ட பாடமானது, இயேசுவானவர் தன்னை யாவரும் காண்பதற்குரிய காட்சிப் பொருளாக ஆக்கிக் கொள்ளவில்லை என்பது தான்.**

**அந்த விஷயத்தில் அவர்—அவர் குறைவுபட்டார்.**

**அவரிடத்தில், யாவரும் தன்னைக் காட்சி யாக காணவேண்டும் என்ற தன்மையை கொண்டிருக்கவில்லை. பாருங்கள், அவர்—அவர் ஒரு காட்சிப்பொருளாக காட்டுபவரா யிருக்கவில்லை.**

**அவருடைய சீஷர்களும் அப்படிப்பட்ட வர்களாக இருக்கவில்லை என்றே நான் நம்புகிறேன். ஒருபொழுதும் அவர்கள் தங்களை காட்சிப் பொருளாக, காட்சிக் குரிய மனிதர்களாக ஆக்கிக் கொள்ள வில்லை.**

18 அங்கே தான் நம்மில் அநேகர் இன்றைக்கு படகைத் தவற விட்டு விட்டோம். (ஒருவேளை இது என்னுடைய சொந்த அபிப்பிராயமாக இருக்கக்கூடும்.) **நாம் யாவற்றையும் பற்றி பெரிதாக தம்பட்ட மடித்துக் கொள்கிறோம்.** ஏன் என்பதை நீங்களே அறிவீர்கள், அது பரிசுத்தமானதா

யிருப்பதைவிட பெரிதாக காட்சிக்குரிய தாக தம்பட்டமடித்துக் கொள்ளுதலாகவே இருக்கிறது என்றே நான் அதைக் கருதுகிறேன்.

19 **கர்த்தருடைய முதலாம் வருகையில், அவரை உண்மையாகவே ஏற்றுக் கொண்டவர்களை கவனித்துப் பார்த்தீர்களா? அதில் சிமியோனும் ஒருவன்; அவன் கர்த்தருடைய வருகைக்காக எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். ஒருவரும் அவனைக் குறித்து ஒன்றும் கேள்விப்பட்டிருக்கவேயில்லை. ஆலயத்தில் இருந்த குருடான அன்னாள், வனாந்திரத்தில் இருந்த யோவான் ஸ்நானன் ஆகியோரும். இவர்கள் எல்லாம்**...

20 **யோவான் ஸ்நானன் தனக்கு ஒன்பது வயதானபோது வனாந்திரத்திற்குள் சென்று விட்டு, அவன் முப்பது வயதாகும் வரையிலும் மீண்டும் வெளியே தோன்றவேயில்லை.**

**அதுவரையிலும் அவன் வனந்தரத்திலேயே இருந்து வந்தான்.**

**அவ்விதமான மனிதர், இரகசியமாக விசுவாசித்து, தாழ்மையாக இருந்து கொண்டு, கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்.**

**அவர்கள் ஒருபோதும் தங்களுடைய கூட்டங்களைப் பற்றி பெரிதாக தம்பட்ட மடித்துக்கொண்டு, அதைப் பற்றி பெரிய விளம்பரங்களைச் செய்து, ("இந்த மணிநேரம் ! இந்த மணி வேளை !") என்றால்லாம் தொலைக்காட்சியில் ஒளிபரப் பிக்கொண்டிருக்கவில்லை.**

அந்த விதமாக செய்திட விரும்புபவர் களுக்கு அதெல்லாம் சரிதான். **ஆனால் எனக்கோ, அது கிறிஸ்துவுக்கேற்ற செய்கை யாகத் தென்படவில்லை.**

21 அவருடைய சகோதரர்கள் அவரிடம் ஒரு சமயம் கூறியதை நான் அறிவேன். அவர்கள் அவரிடம், "நீர் இந்த

அற்புத அடையாளங்களைச் செய்கிறீர், நீர் ஏன் எருசலேமுக்கு போய் வெளியரங்க மாக அவைகளைச் செய்யக்கூடாது? நாங்கள் பஸ்கா பண்டிகைக்கு எருசலே முக்குப் போகிறோம், நீரும் அங்கே வந்து, பிரதான ஆசாரியனான காய்பாவை அழைத்து, மற்றும் அவரைச் சேர்ந்தவர் களையும் வரவழைத்து, அங்கே அவர் களுக்கு முன்பாக இவைகளையெல்லாம் ஏன் செய்யக்கூடாது? அவர்களும் அறிந்து கொள்ளட்டுமே! அவர்களுக்கு முன்பாக இவைகளைச் செய்யும், அப்பொழுது அவர்களும் உம்முடைய கிரியைகளை அறிந்து கொள்வார்களே. இப்பொழுது, பாரும், நீரோ ஒரு கூட்ட மீனவர்களோடும் மற்றூம் இன்னபிற மக்களோடும் ஆற்றங் கரையில் உமது நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறீரே, அவர்களெல்லாரும் கீழ்த்தரமான மக்களாயிற்றே! நீர் ஏன் அங்கே போய் இவைகளைச் செய்யக்

கூடாது? உலகம் அதைப் பார்க்கட்டுமே" என்றார்கள். பார்த்தீர்களா?

22 இயேசுவோ, "என் வேளை இன்னும் வரவில்லை. உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது" என்று கூறினார். உ— ஊ. புரிகிறதா?

23 யோவான் ஒரு சமயம்... யோவான் ஸ்நானன் அவனது வருகையைக் குறித்து வேதவாக்கியங்கள் முன்னுரைத்துள்ளன. "அவன் வரும்பொழுது... " ஏன், ஏசாயா கூட யோவான் ஸ்நானன் பிறப்பதற்கு எழுநூற்றுப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே "வனாந்திரத்தில் கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று" என்று முன்னுரைத் திருக்கிறான். "மலைகளெல்லாம் ஆட்டுக் குட்டிகளைப் போல் துள்ளியது, இலைக ளெல்லாம் கை கொட்டின. பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு சகல மலையும் குன்றும், தாழ்த்தப்பட்டு" என்று ஏசாயா கூறி யுள்ளான்.

24 இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களெல்லாம் கூறப்பட்டுள்ளன! அந்த நாட்களின் ஊழியக்காரர்களெல்லாம் எப்படியிருந்தார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? இத்தீர்க்கதரிசன வாக்கியங்களை படித்த மக்கள், இவ்வாறு கூறியிருக்கக்கூடும்: “என்னே! அந்த மகத்தான தீர்க்கதரிசி வரும்போது, யாவரும் அவரை அறிந்து கொள்ளுவார்கள். தேவன் ஆகாயத்தில் வரவேற்புக் கம்பளம் விரித்து, பரலோகத்தின் நடைக்கூடத்தை தேவன் முன்னுக்கு நீட்டி, அதிலிருந்து அக்கினி இரதத்தை தோன்றச் செய்து அதை கீழே இறங்கப் பண்ணி, ஒரு தூதர்களின் கூட்டம் அவனை பூமிக்கு பாதுகாவலாக கொண்டு வந்து சேர்க்கும்” என்று கூறியிருப்பார்கள்.

25 ஆனால், அவன் வந்தபொழுதோ, அவன் கவர்ச்சியற்ற முகத்தையுடைய பிரசங்கியாக, ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு, இடுப்பில் ஒரு தோல்துண்டு கச்சையாக உடுத்திக் கொண்டவனாக

வந்தான். ஒருவேளை குளித்திருக்கவே மாட்டான் போலும். ஒருவேளை மூன்று மாதத்திற்கொரு முறை அல்லது நான்கு மாதத்திற்கொரு முறையோ தான் குளித் திருக்கக்கூடும். அவன் வனாந்திரத்தி லிருந்து வெளியே வந்து, முழங்கால் அளவு சகதியாக இருந்த இடத்தில் நின்று கொண்டு, "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று பிரசங்கித்தான். அவன் ஒருபோதும் பெருநகரங்களுக்குச் செல்லவேயில்லை. யாராவது அவன் பிரசங்கிப்பதைக் கேட்க விரும்பினால், அதைக் கேட்க விரும்புகி றவர்கள், அதற்காக அவர்கள் யோர்தான் நதிக்கரைக்குத்தான் வரவேண்டும். அவன் என்ன செய்தான்? அவன் தேசத்தை அசைத்தான். அவன் உலகை அசைத்தான்.

26 அங்கே ஏற்பட்டுக் கொண்டிருந்த ஒரு அசைவைக் குறித்து மக்களோ ஒன்றுமே அறிந்திருக்கவில்லை. இயேசு வந்தபொழுது, அவர் ஒருபோதும்

பெரும்புள்ளிகள் நடுவில் தன்னை காண் பித்துக் கொள்ளவில்லை. அவர் தமக்கு சொந்தமானவர்களிடத்திற்கே வந்தார். அவர் வருகையை எதிர்நோக்கிக் கொண் டிருந்தவர்களிடம் மட்டுமே வந்தார். அங்கே தான் அசைவு வருகிறது. இன்றைக்கு அவர் அதைத்தான் செய்கிறார். தேவனால் அழைக்கப்பட்டவர்களிடம் தான் பரிசுத்த ஆவியானவர் வருகிறார். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நடுவில் மகத்தானதொரு அசைவானது உண்டா யிருக்கிறது. வல்லமையான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, ஆனால் உலகமோ அதைப் பற்றி ஒன்றுமே அறிந்திருக்கவில்லை.

27 அவர்கள் இந்த எல்லாவிதமான பெரிய சொல்வளமான நயமுள்ளதான காரியங்களையே பற்றி சிந்திக்கிறார்கள். உலகளாவிய வானொலி, தொலைக்காட்சி, ஒலி ஒளிபரப்புகளும், பலகோடி டாலர்கள் மதிப்புள்ள கட்டிடங்கள் மற்றும் இவ்வித

மான காரியங்களையே அவர்கள் பெரிதாக நினைக்கிறார்கள். அவை தேவனுடைய பார்வையில் மதியீனமாக இருக்கின்றன. தேவன் இவ்வாறான பெரிய காரியங் களைப் பார்க்கிறதில்லை. மனிதன் எதை "மதியீனம்" என்று அழைக்கிறானோ, அதை தேவன் "மகத்தானது" என்று அழைக்கிறார். மனிதன் எதை "மகத் தானது" என்று அழைக்கிறானோ, தேவன் அதை "மதியீனம்" என்று அழைக்கிறார். "பைத்தியமாய்த் தோன்றுகிற பிரசங்கத்தி னாலே, இழக்கபட்டவர்களை இரட்சிப்பது தேவனுக்குப் பிரியமாயிருந்தது".

28 இப்பொழுது யோவானைப் பற்றி அவர்கள் என்ன கூறியிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? "அங்கே ஒரு மதவெறியன் இருக்கிறான், கவர்ச்சியற்ற முகத்தோற்றங்கொண்ட நபராய் காணப் படுகிறவன், ஒரு ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு வனாந்திரத்திலிருந்து வெளியே வந்துள்ளான். ஏன் அவன்

சேற்றில் நின்று கொண்டு, வெறுங்காலோடு, அங்கே யோர்தானின் கரையில் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறான். யாராவது அவன் பேசுவதை போய் கேட்பார்களா? ” என்று சொல்லியிருப்பார்கள்.

29 இயேசு வந்தபொழுது, “ஒரு மேசியா மாட்டுத்தொழுவத்தில் வைக்கோல் குவியல் மேல், மாடுகள் படுத்துக் கொண்டிருக்கும் இடத்தில் பிறந்திருக்கிறாரா? முறைகேடான ஒரு தாயாரா அவருக்கு உண்டு என்று கூறுகிறாய், அவரது தாயும் தந்தையும் விவாகம் செய்து கொள்ளும் முன்பே, அவள் தாயாகி விட்டாளே? அவர் முறை கேடாகப் பிறந்தாரே? அந்த நபரா? ” என்றெல்லாம் கேட்டிருப்பார்கள். ஓ, என்னே! பார்த்தீர்களா? ஆனால் அவரோ மகத்தானவராக இருந்தார். ஆனால் அவர்களோ அதை அறியவில்லை. புரிகிறதா? அவர்கள் அவரை அறியவில்லை.

30 அதேபோல்தான், இன்றைய சுவிசேஷமும் “மகத்தானதாக” இருக்கிறது. சுவிசேஷமானது இதற்கு முன்பு நடந்திராதபடி அந்தவிதமான அசைவைக் கொண்டுவந்து கொண்டிருக்கிறது, ஆனால் அது மீதியாயிருப்பவர்களிடத்தில் அசை வைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. அது உண்மை, அது அவர்களை ஆயத்த மாக்கிக்கொண்டிருக்கிறது.

31 “அவர் தனக்கு சொந்தமானவர் களிடத்தில் வந்தார். அவருக்குச் சொந்த மானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள வில்லை.” அவர் சீஷர்களிடம், “புறஜாதி யாரிடத்தில் போகாதிருங்கள், காணாமற் போன இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே போங்கள். நீங்கள் போகையில் உங்களை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான். ஒரு பட்டணத்திற்கு நீங்கள் போகையில், அவர்கள் உங்களை ஏற்றுக் கொள்ளாவிடில், உங்கள் பாதங்களிலுள்ள தூசியை உதறி விட்டு, அங்கிருந்து

புறப்பட்டுப் போங்கள். நியாயத்தீர்ப்பின் நாளிலே அந்தப்பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா பட்டணத்திற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார். அம்மனிதர்களை ஏற்றுக் கொள்ளாத நகரங்கள் ஒவ்வொன்றும் இன்றைக்கு சாம்பலாய் கிடக்கின்றன. அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் ஒவ்வொன்றும் ஒரு சிகரத்தைப்போல இன்னும் நிலைத்து நின்று கொண்டிருக்கின்றன. அது உண்மையே. பாருங்கள். அவர் பதிலளிப்பதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது. ஆனால், தேவன் எப்படியும் பதிலளிக்கிறார். கவலை வேண்டாம்.

## 60-1231 – வெளிப்படுத்தின விசேஷம், நான்காம் அதிகாரம் பாகம் I

**தூதர்கள் ஒன்றாகக் கூடிவரும்போது, அவர், 'நல்லது, என்னுடைய ஊழியக்காரனாகிய வில்லியம் பிரன்ஹாம் என்னைக் குறித்து தான் அக்கறை எடுத்துக் கொள்கிறான் என்பது எனக்குத் தெரியும்' என்று அவரால் கூற முடியும். அது – அதைத்தான் நான் – அவர் அதைச் செய்ய வேண்டும் என்பது தான் எனக்கு விருப்பம்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-07-20A கேதரா தேசத்து வெறிபிடித்த மனிதன்

---

19. இப்பொழுது, நான் சந்தோஷமாயிருக்கிறேன். எனக்குக் களைப்பாயுள்ளது. நான் சரீரபிரகாரமாக களைப்படைந்திருக்கிறேன். ஒரு சாதாரண மனிதனுக்கு இல்லாத கஷ்டங்களும் காரியங்களும் எனக்குண்டு. எப்படியாக சாத்தான் இரவும் பகலும் எல்லா நேரமும் என்னோடு சண்டையிடுகிறான் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம். அந்தப் பிசாசுகளைத் துரத்தும்போது, அவைகள் உங்களைச் சுற்றி சுற்றி வந்து கொண்டேயிருக்கும். உங்களுக்குப் புரிகிறதா? ஆனால் அங்குள்ள அந்தக் காரியங்கள் எல்லாம்... எனக்கு ஒரு யுத்தம் உண்டு, யாருமே அதைக் குறித்து அறிய மாட்டார்கள்.

ஆனால் நான் ஜனங்களை நேசிக்கிறேன். நான் அவர்களை என்னுடைய முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன். எனவே, அது ஜனங்களுக்குத் தெரியும். என்னுடைய ஊழியம் ஒரு பெரிய நிலைக்கு வருவதை, அது பெரியதாய் காணப்படும் நிலைக்கு வருவதை நான் ஒருபோதுமே அனுமதிக்கவில்லை. அது நிச்சயமாக - அது நிச்சயமாக என்னுடைய மேலிடத்திற்குத் தான் போயாக வேண்டும். என்னுடைய ஊழியமானது தொடர்ந்து அற்பமாகவே இருந்து வருகிறது. நான் ஒரு சில ஜனங்களோடு இடைபடுவேன், ஏறக்குறைய அந்த நேரத்தில் கூட்டம் பெருகிக் கொண்டே வரும், பிறகு நான் வேறு ஏதோவொரு இடத்திற்குப் போய் விடுவேன், அப்படியே வேறு ஏதோவொரு இடத்திற்குப் போகிறேன். ஏனென்றால் என்னுடைய - என்னுடைய நோக்கம் முழுவதும் என்னுடைய பரலோகப் பிதாவைப் பிரீதிப்படுத்துகிறதாகவே

இருக்கிறது. அவரைப் பிரீதிப்படுத்துகிற அதை மாத்திரமே நான் செய்ய வேண்டியவனாயிருக்கிறேன்.

20. உங்கள் எல்லாருடைய ஜெபமும் எனக்கு-எனக்குத் தேவை. அதுதான் எப்போதுமே என்னுடைய நோக்கமாக இருக்கிறது, கர்த்தர் என்னைச் சிறியவனாகவே வைத்திருக்கிறார். பாருங்கள். அந்த... அது... அவர் என்னை உபயோகிக்கக் கூடியதான இடத்தில், அங்கே தான் என்னால் இருக்க முடியும். அவர்... அந்த ஒரு இடத்திற்குப் (போகவே) நான் விரும்புகிறேன். தூதர்கள் ஒன்றாகக் கூடிவரும்போது, அவர், 'நல்லது, என்னுடைய ஊழியக்காரனாகிய வில்லியம் பிரன்ஹாம் என்னைக் குறித்து தான் அக்கறை எடுத்துக் கொள்கிறான் என்பது எனக்குத் தெரியும்' என்று அவரால் கூற முடியும். அது - அதைத்தான் நான் - அவர்

அதைச் செய்ய வேண்டும் என்பது தான் எனக்கு விருப்பம்.

பிறகு அந்த நாளில்... நான் அடிக்கடி வியப்படைவதுண்டு... அவர் தமது கரங்களை நீட்டி, ‘வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்’ என்று கூறின போது, அந்த நாளில் நான் அங்கே நின்று கொண்டிருக்க விரும்பினேன். நான் அனேகமாக ஒருபோதும் அவர் அவ்வாறு கூறுவதைக் கேட்க மாட்டேன், ஆனால் அங்கே ஒரு காரியத்தைக் கேட்கும்படி எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன், அவர் ஏதோவொரு நாளில், ‘என்னுடைய நல்ல உண்மையான ஊழியக்காரனே, நீ நன்றாகச் செய்தாய்’ என்று கூறுவதைக் கேட்பதையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்.

21. அது - அந்தச் சத்தத்தைக் கேட்கவே நான் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

அவர் தமது இராஜ்யத்திற்குள் மாத்திரம் என்னைப் போக அனுமதிப்பாரானால், அப்பொழுது அவருடைய புனிதமான கால்கள் அல்லது அவ்விதமான ஏதோவொன்றின் மேல் என்னுடைய கரங்களை வைக்கக்கூடிய அளவுக்கு நான் நெருங்கி மேலே செல்வேன், அது சரியாகவே இருக்கும். என்னால் அவரைக் காண முடியுமானால்...



உங்களை அவரிடம் ஒப்புவியுங்கள். அவர் உங்களுக்காக ஜெயங்கொள்வார். அதற்கான வழியை அவர் அறிந்திருக்கிறார்; நமக்கோ அது தெரியாது.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63–0825M — நான் எப்படி ஜெயங்கொள்ள முடியும்?

---

66 ஒ, என் அன்பார்ந்த நண்பர்களே, வாசல் அடைபடக் காத்திருக்காதீர்கள். இயேசு, "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" என்றார். (சகோதரனே உங்களுக்கு நன்றி.) "அப்படியே மனுஷ குமாரன் வருங்காலத்திலும் நடக்கும்." இப்பொழுது, யாராகிலும் வாசலுக்கு வெளியே மாட்டிக் கொள்ளப்போகிறார்கள்.

அவர்களில் அநேகருக்கு நல்லெண்ணம் இருந்திருக்கக் கூடும். "என்றாகிலும் ஒரு நாள் அது நடக்கும் போது, நாங்கள் சகோதரன் நோவாவுடன் உள்ளே சென்று விடுவோம், ஏனென்றால் அவர் ஒரு அருமையான நபர்" என்று

நினைத்துக் கொண்டிருந்திருக்கக் கூடும். ஆனால், நீங்கள் பாருங்கள், அது எட்டு பேரை மாத்திரமே உள்ளே விட்டது.

**67** இப்பொழுது, சற்று ஆழ்ந்து சிந்தியுங்கள். **நீங்கள் அதைக் குறித்து கவலையற்றவர்களாய் இருப்பீர்களானால், துரிதமாக உள்ளே வந்து விடுங்கள். ஏனெனில் எந்த நேரத்திலும் வாசல் அடைபடக் கூடும்.**

**68** தேவனுடைய திட்டத்தில் எப்பொழுதுமே ஒரு பேழை இருந்து வந்துள்ளது. நோவாவின் காலத்தில் அவருடைய ஜனங்களை இரட்சிக்க ஒரு பேழை இருந்தது. நியாயப்பிரமாணத்தின் காலத்தில் ஒரு உடன்படிக்கை பெட்டி இருந்தது. நியாயப் பிரமாண காலத்தில் அவர்கள் உடன்படிக்கைப் பெட்டிக்குப் பின்னால் சென்றனர்.

இப்பொழுது மூன்றாம் யுகம்; நோவாவின் காலம், லோத்தின் காலம், தற்போதைய காலம். இப்பொழுது, ஒரு பேழை உள்ளது. அந்தப் பேழை ஒரு ஸ்தாபனம் அல்ல, அது நீங்கள் செய்யும் நற்கிரியைகள் அல்ல; அது "ஒரே ஆவியினாலே" ரோமர் **8:1**–ல், "நாம் எல்லாரும் அந்த ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக, அந்த ராஜ்யத்தின் ஆதிக்கத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம்" என்று கூறப்பட்டுள்ளது. ஒரே ஆவியின் ஞானஸ்நானம். எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும், எவ்வளவு கெட்டவர்களாயிருந்தாலும், நீங்கள் எப்படி இருந்தாலும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் நீங்கள் அந்த ராஜ்யத்துக்குள் வந்து விடுகிறீர்கள். புரிகிறதா? அந்த ஒரு வழியில் மாத்திரமே

நீங்கள் ஜெயங் கொள்ள முடியும். சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழுள்ள அனைவரும் ஜெயங்கொண்டவர்கள்; ஏனெனில் நீங்களாகவே ஜெயங்கொள்ள முடியாது. அவரே உங்களுக்காக ஜெயங்கொள்ளுகிறார். நீங்கள் இளைப்பாறிக் கொண்டிருக்கிறீர்கள்.

69 “சகோதரர் பிரான்ஹாமே, நான் அதற்குள் இருக்கிறேன் என்று எப்படி அறிந்து கொள்வது?” நீ எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறாய் என்பதை கவனி. நீ சுற்றிலும் பார். நீ எந்த முயற்சியுமின்றி தானாகவே அந்த வாழ்க்கை வாழ்கிறாயா என்று பார். இல்லாவிட்டால், நீ கடினமாக முயற்சி செய்து அந்த வாழ்க்கை வாழ வேண்டியுள்ளதா? ஆனால் அப்படி செய்ய முயலாதே. நீ எப்போதாவது முயற்சித்துள்ளாயா? ஆம், அவ்வாறு செய்யாதே.

**70** அது குழந்தையின் கையை அரைக் கை சட்டை கைக்குள் நுழைப்பது போன்றது, நீங்கள் பாருங்கள். அது எழுந்து, கீழே விழுந்து, புரண்டு, எல்லாம் செய்யும். பாருங்கள்? ஆனால் அந்த குழந்தையால் தானாகவே கையை சட்டைகைக்குள் போட முடியாது. "தேனே, உன் சட்டையை போட்டுக் கொள்" என்று சொல்வீர்களானால், அதனால் அதைச் செய்ய முடியாது, அது சிறிய கையை மேலே தூக்கும், கீழே போடும், அதன் கை எல்லா விடங்களிலும் இருக்கும். அதற்கு ஆடாத உங்களுடைய கரம் தேவைப்படுகிறது.

**ஓ, என் கையை பிதாவினிடம் சமர்ப்பித்து, "கர்த்தராகிய இயேசுவே, என்னால் அதற்குள் கையை நுழைக்க முடியவில்லை. நீர் எனக்கு உதவி செய்யும். என் சட்டையை எனக்கு அணிவியும்" என்று கூறுவதற்கு நான் எவ்வளவு**

மகிழ்ச்சியடைகிறேன். நான் முயற்சி செய்வதை விட்டு விடுகிறேன். அவரே அதைச் செய்யட்டும். புரிகிறதா?

71 அந்த சிறு குழந்தை தொடர்ந்து முயன்று கொண்டேயிருந்து, "ஓ, என்னால் அதைச் செய்ய முடியும். என்னால் அதைச் செய்ய முடியும்" என்று கூறுமானால்; அது எல்லாவிடங்களுக்கும் நகர்ந்து சென்றாலும் அதனால் அதைச் செய்ய முடியாது.

அப்படித்தான் உங்களாலும் செய்ய முடியாது, என்னாலும் செய்ய முடியாது. ஆனால் நாம் அமரிக்கையாயிருந்து அவர் அதைச் செய்யும்படி சமர்ப்பித்தால் நலமாயிருக்கும். அப்படியே அவரிடம் சமர்ப்பித்து, "இதோ, கர்த்தாவே, இதோ நான் இருக்கிறேன், நான் ஒன்று மற்றவன். என்னை—என்னை சமர்ப்பிக்கிறேன். நீர் என் கையை சரியாக இடத்தில்

நுழைப்பீராக" என்று கூறுவோமாக. அது தான் வெற்றி. அதுவே ஜெயங் கொள்ளுதலாய் உள்ளது.

72 நீங்கள் ஜெயங்கொள்ள வேண்டியது உங்களையும், உங்கள் கருத்துக்களையும், உங்கள் காரியங்களையுமேயாகும். உங்களை அவரிடம் ஒப்புவியுங்கள். அவர் உங்களுக்காக ஜெயங்கொள்வார். அதற்கான வழியை அவர் அறிந்திருக்கிறார்; நமக்கோ அது தெரியாது.

73 நோவாவின் காலத்தில் ஜெயங்கொண்டவர்கள் எட்டு பேராய் இருந்தனர். அவர்கள் தான் உள்ளே பிரவேசித்தனர். அவர்கள் உள்ளே மாட்டிக் கொண்டனர்.

இப்பொழுது, நண்பர்களே, பாருங்கள், அவர்கள் இதை ஒலிப்பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நான்

நம்புகிறேன். அது தொலைக்காட்சியில் இருந்தாலும் அல்லது இல்லாமற்போனாலும்...என்னை மன்னிக்கவும், ஒரு ஒலி நாடாவில் பதிவாகிறது. நீங்கள் என்ன செய்தாலும், இப்பொழுது யார் கேட்டுக் கொண்டிருந்தாலும் அல்லது இனிமேல் யார் கேட்டாலும், காலம் தாமதமாகிவிட்டது, உங்களுக்கு நல்லெண்ணம் இருக்கக் கூடும், ஆனாலும் உள்ளே வந்துவிடுங்கள். இப்பொழுது, கஷ்டப்பட்டு முயற்சி செய்யாதீர்கள். "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்." தேவன் அதை செய்யட்டும். உங்களை அவரிடம் ஒப்புவித்து, தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்னும் பரிபூரண திருப்தியான விசுவாசத்துடன் நடந்து

செல்லுங்கள். அது ஒரு ஸ்தாபனத்தை சேர்வதோ, அதை விட்டு வேறொரு ஸ்தாபனத்தை சேர்வதோ, இங்கும் அங்கும் அல்லது வேறெங்கோ ஒடுவதோ, இதை முயற்சி செய்வதோ அல்ல. உங்களை தேவனிடம் ஒப்படைத்து அவருடன் நடந்து செல்லுங்கள். சமாதானத்துடன், அமைதியுடன், யாரும் உங்களை தொந்தரவு செய்யாதபடிக்கு, அவருடன் தொடர்ந்து நடந்து கொண்டேயிருங்கள். அதுவே சரியானதாகும்.

**63–0825M — நான் எப்படி ஜெயங்கொள்ள முடியும்?**

Rev. William Marrion Branham

உலகத்தோடு அல்லது உலகத்தின் காரியங்களோடு காலத்தை வீணாக்காமலிருக்கிற ஒரு மணவாட்டிக்காகவே அவர் வருகிறார். அவள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் கழுவப்பட்டிருக்கிறாள். அவள் தன்னுடைய—தன்னுடைய அன்பை அவருக்கு மாத்திரமே பிணையமாக வைத்திருக்கிறாள். உலகத்தின் அன்போ அவளுக்கு மரித்துப் போய்விட்டது. "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்."

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62–0121E —

# ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

---

216 வேளையானது வந்துவிட்டது. "அவருடைய மணவாட்டி தன்னை ஆயத்தம்பண்ணினாள்." ஓ! "தன்னை ஆயத்தம்பண்ணினாள்." அவள் இந்த எல்லாக் காரியங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டாள். நினைவிருக்கட்டும் எஸ்தரோ தெரிந்து கொள்ளப்பட்டாள், மற்றவர்களோ புறக்கணிக்கப்பட்டனர். மீண்டும் பிறந்து, தேவனுடைய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே அந்நாளில் தெரிந்து கொள்ளப்பட்டு, அவர்களுடையத் தலையின்மேல் மகிமையின் கிரீடம் சூட்டப்படும். மற்றவர்களோ புறக்கணிக்கப்படுவர்.

217 நான் நடைபெற்றிருந்த ஒரு சிறு காரியத்தை உங்களுக்குக் கூறட்டும்.

நீங்கள் அறிந்துள்ளபடி நான்—நான், நான் ஒரு மிஷினெரியாய் சுவிசேஷப் பணியினை செய்து, மிஷனெரி ஊழியத்தில் கிட்டத்தட்ட கடல் கடந்து உலகத்தை ஏழுமுறை சுற்றி வந்திருக்கிறேன். இங்கே அண்மையில் ரோமபுரி பட்டிணத்தில் நடந்த சம்பவம், ரோமபுரி கலைத்திறன் வாய்ந்ததான ஒரு மகத்தான பட்டிணமாயிருக்கிறது. அவர்கள் அங்கு ஓர் ஓவியப் பள்ளியினை வைத்திருந்தனர். எனவே படங்களுக்கு வண்ணந்தீட்டுதலைக் கற்றுக்கொள்ள ஒவ்வொரு வருடமும் நம்முடைய அமெரிக்க இளைஞர்கள் பலர் ஒரு வருட அல்லது இரு வருட காலப் பயிற்சியினை ஓவியத்தில் எடுத்துக்கொள்ள அங்குச் செல்வர். அந்தச் சம்பவம் எனக்கு கூறப்பட்டிருந்தபடிப் பார்த்தால், ஒரு சில வருடங்களுக்கு முன்னர் ஓர் அமெரிக்க வாலிபக் குழு அங்கு வந்திருந்ததாம்.

அவர்கள் அங்கு சென்றவுடனே, அவர்கள் ஒழுக்கக்கேடான கீழ்த்தரமானவற்றை செய்பவராகிவிடுகிறார்கள். அவர்கள் ரோமபுரியில் இருக்கும்போது, ரோமபுரியர் செய்வது போன்றே இவர்களும் செய்கிறார்கள். அதாவது வெளியே சென்று மது அருந்துதல், தங்களை அரைகுறை நிர்வாணிகளாக்கிக் கொள்ளுதல் மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் பையன்கள் மற்றும் பெண்கள் இருவருமே தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

**218** அங்கே ஒரு குறிபிட்டப் பள்ளி இருந்தது. இந்தப் பள்ளிக்குத்தான் இந்த அமெரிக்க வாலிபர் குழு வந்திருந்தது. ஏறக்குறைய அவர்கள் ஒவ்வொருவரும் அதேக் காரியத்தையே செய்திருந்தனர். ஆனால் ஒரு சிறு வாலிபப் பெண்ணோ, அவள் அதை சகித்துக்கொள்ள மனமில்லாதிருந்தாள். அவளும் அதில் தங்கியிருந்தாள். ஆனால் அவர்கள்

எல்லோருமே வெளியே மது அருந்திக்கொண்டிருக்கும்போது, இவள் மட்டும் இரவு நேரத்தில் படிப்பாள். பகல் நேரத்தில் அவள் பணிபுரிந்தும், படித்தும் வந்தாள். எனவே அவள் அந்த முழு பள்ளியின் பரியாச நகைப்புக் கிடமானவளாக இருந்தாள். அவள் தன்னை ஒரு நாணயமிக்கப் பெண்மணியைப் போன்றே தன்னை நடத்திக்கொண்டாள். அங்கே அவளைச் சுற்றிலுமிருந்த வாலிப ரோமப் பையன்களோ அவளை வெளியே அழைத்துச் செல்ல முயற்சித்தபோதும், அவளோ அதற்கு மறுத்துவிட்டாள். போகவில்லை, ஐயா. அவள் தன்னுடைய பாடங்களோடு, சரியாகக் கூறினால் வரையவும், வண்ணந்தீட்டவுங் கற்றுக்கொண்டதோடு சரியாக தரித்திருந்தாள். அவள் அதனோடு மட்டுமே தரித்திருந்தாள்.

**219** முடிவிலே அந்த இடத்தில் காவல்புரிந்து வந்த ஒரு வயோதிக காவலன் அவள் மிகவும் வித்தியாசமாயிருந்ததைக் கண்டு, அவளையே தொடர்ந்து கவனித்து வந்தார். அவர் ஒரு ரோமன் கத்தோலிக்கனாயிருந்தபோதிலும் அவள் தன்னை எப்படி நடத்திக்கொண்டாள் என்று பார்த்து, அவளையே, தொடர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் மாலை அந்த வாலிபப் பெண் அவர்கள் வைத்திருந்த அந்தப் பள்ளியில் அவள் தங்கியிருந்த ஓவியக்காரர்களின் அறையிலிருந்து வெளியே பள்ளிக்கூட மைதானப் பூங்காவிற்கு வந்து, பின்னர் அங்கிருந்து சற்று வெளியேறி அங்கிருந்த ஒரு குன்றின் உச்சியை நோக்கியவாறேச் செல்ல, சூரியனோ அஸ்தமித்துக் கொண்டிருந்தது. அவளோ அங்கு அழகிய, தெளிவான முக ஒப்பனையற்ற

முகத்தோடு, தன்னுடையத் தலைமுடி தொங்கிக் கொண்டிருக்க சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்தத் திசையை நோக்கியவாறே அந்தவிதமாக பார்த்துக்கொண்டிருந்தாள்.

**220** இந்த வயோதிக காவலரோ அங்கே முற்றத்திலிருந்து கொண்டு அவளை துருவி ஆராய்ந்து பின்தொடர்ந்து கொண்டிருந்தார். அவர் துருவி ஆராய்ந்திருந்தபடியால், அவர் அந்தப் பெண்ணையே தொடர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். ஏதோ ஒன்று அவரிடத்தில், “போய் அவளிடத்தில் பேசு” என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தது. ஆகையால் அவர் தன்னுடையப் பிரம்புத் தடியை கீழே வைத்துவிட்டு, வேடிக்கையாய்த் தோற்றமளிக்கும் தன்னுடைய தொப்பியைக் கழற்றிவிட்டு, அந்த வாலிபப் பெண்மணி இருந்த இடத்திற்கு நடந்து சென்றார்.

பின்னர் அவர் தன்னுடையத் தொண்டையைக் கனைத்து குரலை சரிப்படுத்தினார். அப்பொழுது அவள் திரும்பிப் பார்த்தாள். அதற்கு அவரோ, "சிறு பெண்ணே, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

அப்பொழுது அவளோ, "சரி ஐயா, பரவாயில்லை" என்றாள்.

**221** அவள் அழுதுகொண்டிருந்ததை அவர் கவனித்திருந்தார். மற்றெல்லாருமே அந்த இரவு ஒரு பெரிய குடிவெறியாட்டத்திற்காக வெளியில் இருந்தனர். அப்பொழுது அவர், "பெருமதிப்பிற்குரிய சீமாட்டியே, நான் உங்களிடத்தில் பேசப் போவதை சரியான விதத்தில் நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்" என்று கூறினார். மேலும் அவர் தொடந்து, "நீங்கள் இங்கே ஏறக்குறைய இரண்டு வருடங்களாக இருந்து வருகிறீர்கள். நீங்கள் வந்த

குழுவினரை நான் கவனித்து வந்திருக்கிறேன். அவர்களோ தொடர்ந்து வெளியே விருந்துகளுக்குச் சென்றுவிட்டு எப்போதுமே இரவு நேரத்தில் குடித்துவிட்டு, தங்களுடைய ஆடைகளை அரைகுறையாக களைந்துகொண்டு உள்ளே நுழைவார்கள். ஆனால் நீங்களோ அப்படிப்பட்ட விருந்துகளில் கலந்துகொள்ளுவதில்லை என்பதை நான் கவனித்து வந்தேன்" என்று கூறினார். அவர் தொடர்ந்து, "நீங்கள் எப்பொழுதுமே சமுத்திரத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்றுள்ளதையும் நான் கவனித்தேன். ஒவ்வொரு மாலையும் நீங்கள் இங்கு நடந்து வந்து, இங்கு நின்று சூரியன் அஸ்தமிப்பதை கவனிக்கிறீர்களே" என்றார். மேலும், "அதற்கு காரணம் என்ன?" என்று கேட்டார். அதன் பின்னர் அவர், "நானோ வயோதிகன். ஆனாலும் உங்களுக்கும் மற்றவர்களுக்குமிடையே

உள்ள இந்த வித்தியாசத்திற்கான காரணங்கள் என்ன என்பதைக் குறித்து அறிந்துகொள்ள நான் ஆர்வமுள்ளவனாயிருக்கிறேன்” என்று கூறினார்.

**222** அப்பொழுது அவளோ, “சரி, ஐயா” என்றாள். அதன்பின்னர் அவள், “ஐயா, சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தபோது, நானோ என்னுடைய வீட்டை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தேன்” என்றாள். மேலும் அவள், “அந்த சூரிய அஸ்தமனத்திற்கு அப்பால் உள்ள இடத்தில்தான் என்னுடைய தாய்நாடு உள்ளது” என்றாள். அவள் தொடர்ந்து, “அந்த தேசத்தில் ஒரு குறிப்பிட்ட மாநிலம் உள்ளது. அந்த குறிப்பிட்ட மாநிலத்தில் ஒரு குறிப்பிட்ட பட்டணம் அங்கு உள்ளது. அந்தக் குறிப்பிட்டப் பட்டிணத்தில் ஒரு குறிப்பிட்ட ஒரு வீடு உள்ளது. அந்த

வீட்டில் ஒரு குறிப்பிட்ட ஒரு பையன் இருக்கிறான்” என்று கூறினாள். மேலும், “அவனும் கூட ஓர் ஓவியனாயிருக்கிறான். நான் இங்கு வருவதற்கு புறப்பட்டபோது, நான் என்னுடைய அன்பை அவனுக்கு பிணையமாக வைத்துவிட்டேன். நாங்கள் ஒருவருக்கொருவர் நிச்சயிக்கப்பட்டிருக்கிறோம்” என்று கூறினாள்.

**223** அவள், “மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல, அதில் எனக்கு சம்மந்தங்கிடையாது” என்று கூறினாள். மேலும் அவள், “நான் உண்மையாயும், சரியாயும் ஜீவிப்பதாக வாக்களித்துள்ளே” என்றாள். தொடர்ந்து அவள், “அந்த மிகப்பெரிய செட்டைகளுடைய ஆகாய விமானம் என்னைக் கொண்டுச் சென்று சமுத்திரத்திற்கு அப்பால் உள்ள அந்த விமான நிலையத்தில் என்னை

இறக்கிவிடும்போது, அங்கே அவன் என்னை சந்திக்க வரும் நாளையே நான் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அதற்காகவே ஆவல் கொண்டிருக்கிறேன். அவன் ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறான். எனவே நாங்கள் அந்தத் தேசத்தில் ஒன்று சேர்ந்து வாழுவோம்.” என்று கூறினாள்.

224 எனவே “அந்தக் காரணத்தினால் தான் நான் அந்தவிதமாக நடந்துகொள்கிறேன். நான் வாக்களித்துள்ள அந்த ஒரு பையனுக்காக உண்மையாயிருக்கிறேன். அவனும் எனக்கு அளித்துள்ள வாக்குறுதிக்கு உண்மையாயிருக்கிறான்” என்று கூறினாள். மேலும், “நான் அவ்வப்போது அவனைக் கேட்டு விசாரித்து அவனுக்கு கடிதம் எழுதுகிறேன், இவ்வாறு நாங்கள் ஒருவருக்கொருவர் கடிதத்தொடர்பு கொண்டுள்ளோம். நாங்கள் இன்னமும்

எங்களுடைய உறுதிமொழி கூற்றுகளை உறுதியாகப் பற்றிக் கொண்டு நாங்கள் சந்திக்கப்போகும் அந்த நாளுக்காகவே காத்துக்கொண்டிருக்கிறோம்" என்று கூறினாள்.

**225** ஓ, உலகத்தின் காரியங்களிலிருந்து விலகியிருக்கும் ஓர் உண்மையான கிறிஸ்தவனுக்கு அது எப்படிப்பட்ட நல்வாழ்வைப் பெற்றுத்தரும். என்றோ ஒரு நாள் ஒரு புறாவின் சிறகுகளின் மேல் துறைமுகத்திற்கு வரப்போகிறதைக் குறித்தே நீங்கள் பேசுகிறீர்கள். உலகத்தோடு அல்லது உலகத்தின் காரியங்களோடு காலத்தை வீணாக்காமலிருக்கிற ஒரு மணவாட்டிக்காகவே அவர் வருகிறார். அவள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் கழுவப்பட்டிருக்கிறாள். அவள் தன்னுடைய—தன்னுடைய அன்பை அவருக்கு மாத்திரமே பிணையமாக

வைத்திருக்கிறாள். உலகத்தின் அன்போ அவளுக்கு மரித்துப் போய்விட்டது. “ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்.”

## 62-0121E — ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

Rev. William Marrion Branham

---

**சகோதரனே, ஒவ்வொரு விலங்கிலிருந்தும், ஒவ்வொரு கௌரவத்திலிருந்தும், நீங்கள் பெற்றிருக்கிற ஒவ்வொன்றிலிருந்தும் நான் கட்டவிழ்க்கப் பட்டிருப்பதற்காக நான் சந்தோஷமாயிருக்கிறேன்.**

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: **கேதரா தேசத்து வெறிபிழுத்த மனிதன், 54-0720A**

---

94. கொஞ்ச காலத்திற்கு முன்பு, நான் இங்கே இந்தியானாவிலுள்ள கேரியில் நின்று கொண்டிருந்தேன். அங்கே அந்த மகத்தான பெரிய ஆலைகளில் ஒன்று இருந்தது, அங்கு தான் அவர்கள் அந்த எஃகு எல்லாவற்றையும் உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் என்னை சுற்றிக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர், “இப்பொழுது” என்றார், அவர், “டாக்டர். பிரன்ஹாம் அவர்களே, இது எவ்வாறு செய்யப்படுகிறது என்று நான் உமக்குக் காண்பிக்கிறேன்” என்றார். அவர் அங்கிருந்த ஒரு மகத்தான பெரிய இடத்திற்கு என்னை மேலே அழைத்துச் சென்றார். நான் ஏதோவொரு விதமாகக் காணப்படுகிற உபகரணங்கள் பொருத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

மேலும் நான்... ஒரு சிறிய விசில் ஊதப்பட்டது, அப்போது ஒவ்வொருவரும் வேலை செய்வதை நிறுத்தி விட்டார்கள்.

அவர்கள் ஒரு சிறிய துடைப்பத்தை எடுத்து, இவ்விதமாக வெளியே நடைபாதையின் மத்தியில் பெருக்கிக் கூட்டினார்கள். நான், "அவர்கள் எதற்காக அவ்வாறு செய்கிறார்கள்?" என்று கேட்டேன்.

95. அவர், "நான் சில நிமிடங்களில் ஒரு காரியத்தை உமக்குக் காண்பிப்பேன்" என்றார். எனவே அவர் குப்பைகள் எல்லாவற்றையும் வெளியே நடைபாதையில் பெருக்கிக் கூட்டினார். பிறகு வேறொரு விசில் சற்று ஊதப்பட, அவர்கள் எல்லாரும் சென்றனர். அவர் ஒரு சிறு பொத்தானை அழுத்தினார், உடனே இதோ ஒரு மகத்தான பெரிய காந்தம் வருகிறது, அது இவ்விதமாக பேரொலி எழுப்பியபடி, முழங்கி, முழங்கி,

முழங்கி, முழங்கி, முழங்கியவாறு கீழே வந்து, கீழே நடைபாதையில் பாய்ந்து வந்தது. அது இவ்விதமாக கீழே அந்த நடைபாதைக்கு குறுக்கே இறங்கி வருகையில், ஏறக்குறைய அந்தக் குப்பைகள் எல்லாமே அந்தக் காந்தத்தை நோக்கி மேலே சென்று, அதில் ஒட்டிக்கொண்டன, பிறகு அது தொடர்ந்து வெளியே போனது, அவர் அதனுடைய காந்தத்தன்மையை அதை விட்டு நீக்க, அவை மறுபடியுமாக உருக்கி வார்ப்பிக்கப்படும்படி எரிகலனில் வந்து விழுந்தன.

அவர், “உமக்கு இது பிடித்தது எப்படி?” என்று கேட்டார்.

நான், “அல்லேலூயா. அல்லேலூயா” என்றேன்.

அவர், “என்ன விஷயம்?” என்று கேட்டார்.

ஓ, நான், “நான் அப்படியே ஒரு காரியத்தைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்” என்றேன்.

அவர், “நீர் ஏதோவொன்றைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்” என்றார்.

நான், “நான் ஒன்றைக் குறித்து சிந்தித்துப் பார்த்தேன்” என்றேன்.

அவர், “நீர் எதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்?” என்று கேட்டார்.

96. நான், “அதோ அங்கே மகிமையில் வீற்றிருக்கிற ஒரு மகத்தான காந்தத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அல்லேலூயா. இந்நாட்களில் ஒன்றில்,” “அநேகமாக இப்பொழுதே அவர் வருவதை நான் கேட்கிறேன். அவர் இறங்கி வரப் போகிறார், இந்தப் பழைய அழிந்து போகக் கூடிய இந்த சரீரம்; அவர் அதை மேலே எடுத்து, அதோ அங்கே

அதை வெளியே கொண்டு சென்று, அதை உருக்கி வார்ப்பிக்கப் போகிறார்" என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். அல்லேலூயா. ஆம், ஐயா.

நான், "ஐயா, நான் ஒரு காரியத்தை உம்மிடம் கேட்க விரும்புகிறேன். அந்த குப்பைகள் எல்லாமே ஏன் போகவில்லை?" என்றேன்.

அவர், "அவைகளில் சில அலுமினியமாக உள்ளன. அவைகளை காந்தம் கவர்ந்து இழுத்துக் கொள்ளாது" என்றார்.

நான், "அல்லேலூயா. அப்படியானால் அந்த இரும்புத் துண்டு ஏன் போகாமல் அங்கேயே இருக்கிறது" என்றேன்.

அவர், "நீங்கள் பாருங்கள், அது போல்ட் கொண்டு இறுக்கப்பட்டுள்ளது" என்று பதிலளித்தார்.

நான், "அல்லேலூயா" என்றேன்.

97. சகோதரனே, ஒவ்வொரு விலங்கிலிருந்தும், ஒவ்வொரு கௌரவத்திலிருந்தும், நீங்கள் பெற்றிருக்கிற ஒவ்வொன்றிலிருந்தும் நான் கட்டவிழ்க்கப்பட்டிருப்பதற்காக நான் சந்தோஷமாயிருக்கிறேன். கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களை நீங்களே இழந்து விடுங்கள்; மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியால் நிறையப்பட்டு, அவருடைய வல்லமையினாலே (காந்தம்) போல இழுக்கப்படுங்கள், அல்லேலூயா, அவர் வரும்போது நான் அவரோடு கூட போவேன்.

**ஆனால் மீனோ எஜமானுடைய மேசைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அவன் துவக்கத்திலேயே ஒரு மீனாயிருந்தான்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 57-0908E — எபிரெயர், ஆறாம் அதிகாரம் #2

422 தேவனுடைய ராஜ்யம் ஒரு மனிதன் ஒரு வலையை எடுத்துக்கொண்டு, கடலுக்குள் போய் அதைப் போடுகிறதற்கு ஒப்பாயிருக்கிறது. அவன் அங்கிருந்து வரும்போது, அவன் ஆமைகளையும், தவளைகளையும், பாம்புகளையும், பல்லிகளையும், சிலந்திகளையும், மீனை வலையில் உடையவனாய் வருகிறான். அந்தவிதமாகத்தான் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

423 கர்த்தர் சகோதரன் கிரஹாமைப் போன்ற ஒரு ஊழியக்காரனிடத்தில், "இங்கே போ; சகோதரன் கிரஹாம் இந்த

மூலைக்குச் சென்று கொஞ்சகாலம் மீனைப் பிடி" என்று கூறுவார். சரி, அப்பொழுது அவர் தன்னுடைய வலையை எடுத்துக் கொண்டு, அங்கே போய், மீன்பிடிக்கும் வலையை வீசத் துவங்குகிறார்.

"சகோதரன் பில், நீர் எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்?"

"நான் எங்கோ வெளியே போய், இந்த மூலையில் வலையைப் போடுகிறேன்."

424 பின்னர், நான் வலையை இழுத்து, "கர்த்தாவே, அதோ அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாராயிருக்கிறார்கள் என்பதை நீர் அறிந்திருக்கிறீர்." என்று கூறுகிறேன். நான் மீண்டும் வலையை இழுத்து, "சரி,

கர்த்தாவே, இதோ அவர்கள் இருக்கிறார்கள்" என்று கூறுகிறேன்.

425 இப்பொழுது ஒரு ஆமை துவக்கத்தில் ஒரு ஆமையாகவே இருந்தது. நீங்கள் அதை வலையில் பிடித்தீர்கள். அது உண்மை. அந்தவிதமாகவே ஜனங்கள், "ஓ அல்லேலுயா! அல்லேலுயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தேவனுக்கு மகிமை. அல்லேலுயா!" என்று உணர்ச்சிவசப்படுதலில் பிடிக்கப்படுகின்றனர். அவர்கள் அப்படியே வலையில் பிடிக்கப்படுகின்றனர், அவ்வளவுதான்.

426 அந்த பழைய ஆமையின் ஆவி அவர்களுக்குள் இருந்தால், அது நீடித்திருக்கப்போவதில்லை, எனவே

அவர்கள், “நல்லது, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்...” என்கிறார்கள். இதோ அவன் போகிறான், திரும்பவும் ஊர்ந்து சென்று விடுகிறான்.

427 நன்னீர் நண்டு வகையான வயோதிகப் பெண்மணியோ, “ஆனால் என்னால் அதைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை” என்று கூறிவிடுவாள். புரிகிறதா?

428 குமாரி சிலந்தியோ கொஞ்ச நேரம் அங்கே அமர்ந்துவிட்டு, அவள், “பிளாப், பிளாப், பிளாப்” என்று, “அங்கே எப்படியும் அதில் எந்தக் காரியமும் இல்லை” என்று கூறித் திரும்பி விடுகிறாள்.

429 குமாரி சர்ப்பமோ, “ஓ, அவர்கள் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள். அங்கே அதில் உள்ளதெல்லாம் அவ்வளவுதான்.

அவர்களை விட மேலான அறிவுள்ளவர்களிடத்திற்கு நான் செல்வேன்” என்று கூறுவாள். ஏன்? அவள் துவக்கத்திலேயே ஒரு சர்ப்பமாயிருக்கிறாள். சுவிசேஷ வலை அவர்களை அப்படியேப் பிடித்துவிட்டது, அவ்வளவுதான்.

430 ஆனால் மீனோ எஜமானுடைய மேசைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அவன் துவக்கத்திலேயே ஒரு மீனாயிருந்தான். அவனுடைய வித்து ஒரு மீனாயிருந்தது. அவன் ஒரு மீனாகவே துவங்கினான், தேவன் தம்முடைய மீனை உலகத் தோற்ற முதல் அறிந்திருந்தார். அல்லேலூயா!

431 நினைவிருக்கட்டும், அவை யாவும் அங்கே ஒரே சேற்றுத் தண்ணீரில் சுவாசித்துக் கொண்டிருந்தன. அவை

யாவும் ஒரே சிற்றோடையில் சுவாசித்துக் கொண்டிருந்தன. அது உண்மை. “நாம் எல்லாரும்...ஒரே ஞானக் கன்மலையிலிருந்து பானம்பண்ணினோம். எல்லோரும் வனாந்திரத்தில் மன்னாவைப் புசித்தோம்.” மற்றவர்கள் புசித்த அதே மன்னாவையே காலேபும், யோசுவாவும் புசித்தனர். அவர்கள் யாவரும் வனாந்திரத்தில் மடிந்து போயினர். ஆனால் இருவர் மாத்திரமே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு செல்ல தெரிந்து கொள்ளப்பட்டு அங்கு சென்றடைந்தனர். அது உண்மையே.

432 “நாம் எல்லோரும் ஒரே ஊற்றிலிருந்து பருகிவந்துள்ளோம்.” ஆனால் பருகின யாவரும் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை. நாம் யாவரும் ஒன்று சேர்ந்து சத்தமிட்டோம். நாம் யாவரும் ஒன்று சேர்ந்து

களிகூர்ந்தோம். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே இரட்சிக்கப்பட்டிருக்கின்றனர். நீங்கள் கவனித்தீர்களா? அது, "கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கத்தக்கதாக கடைசி நாட்களில் அந்த இரண்டு ஆவிகளும் மிக நெருக்கமாயிருக்கும்," என்று கூறப்பட்டுள்ளது. கூடுமானால். புரிகிறதா? அது உண்மையான தேவனுடைய ஆவியாய், நித்திய ஜீவனுக்கென்று முன் குறிக்கப்பட்டதாயுள்ளது.

**57-0908E — எபிரெயர், ஆறாம் அதிகாரம் #2**

Rev. William Marrion Branham

**நீங்கள் யுத்தம் செய்தால், தேவனால் யுத்தம் செய்ய முடியாது** (If you fight, God can't fight). **தரித்து நில்லுங்கள்; தேவனை யுத்தம் செய்ய விடுங்கள், அவர் அதை சம்பவிக்கும்படி செய்வார். ஆமென். அவர் குற்றம்கண்டுபிடிக்கும் ஒவ்வொருவரையும், எல்லாவற்றையும் வெட்கத்திற்குட்படுத்துவார்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: **தேவன் என்பவர் யார்?**, ஆகஸ்டு 15, 1950

---

52. ஓ, என்னே. நான் அவரை என்னுடைய முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன். நான் கர்த்தராகிய இயேசுவை என்னுடைய முழு ஆத்துமாவோடும், இருதயத்தோடும், மனதோடும் நேசிக்கிறேன் என்பதை எல்லாரும் அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

சமீபத்தில் யாரோ ஒருவர் சொன்னார், ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் என்னை பயமுறுத்தி, "நீ தெய்வீக சுகமளித்தலை பிரசங்கம் பண்ணுவதை விட்டுவிடாவிட்டால், நாங்கள் மேடையில் ஒரு வெடிகுண்டைப் போட்டுவிடுவோம்" என்றார்.

நான், "அந்தப் புகை காய்ந்துபோகும் முன்பே நான் மகிமையில் இருப்பேன் (The smoke won't dry till I'll be in glory). அதெல்லாம் சரிதான்" என்றேன். நாம் ஏன் பயப்படுகிறோம்? என்னே, தேவன் உங்கள் பட்சத்தில் இருந்தால், உங்களுக்கு விரோதமாக யார் இருக்க முடியும்? என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இவர்களுக்கு வருத்தமுண்டாக்குவதை (தீங்குசெய்வதைக் -

மொழிபெயர்ப்பாளர்) காட்டிலும் உன்னுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லை கட்டி தொங்கவிட்டு (hanged) சமுத்திரத்தின் ஆழங்களுக்குள் மூழ்கடிப்பது நலமாயிருக்கும் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது உங்களுக்குத் தெரியுமா?

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின்தொடரும். அபிஷேகம் பண்ணப்பட்ட என்னுடையவர்களைத் தொடாதிருங்கள். என்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு தீங்கு செய்யாதிருங்கள்."

நீங்கள் யுத்தம் செய்தால், தேவனால் யுத்தம் செய்ய முடியாது (If you fight, God can't fight). தரித்து நில்லுங்கள்; தேவனை யுத்தம் செய்ய விடுங்கள், அவர் அதை சம்பவிக்கும்படி செய்வார். ஆமென். அவர் குற்றம்கண்டுபிடிக்கும் ஒவ்வொருவரையும், எல்லாவற்றையும் வெட்கத்திற்குட்படுத்துவார். சகோதரர்களே, நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? நாம் விசுவாசத்திற்கு அமைதலாகிவிடுவோம் (settle down).

**புறக்கணிப்பின் காலங்களிலே எவ்வாறு புதிய ஏற்பாட்டுச் சபையானது இக்காலங்கள் தோறும் இருந்து வந்துள்ளதோ, அதே நிலையில் காணப்பட்ட இந்த யூதர்களும் எங்கு சென்றாலும் துன்புறுத்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, துரத்திவிடப்பட்டு, அலைக்கழிக்கப்பட்டு, தூக்கியெறியப்பட்டு இருந்த நிலையைப் பார்க்கையில் அவர்கள் இன்னும் இருப்பது ஒரு இரகசியமானதாகக் காணப்படுகிறது. இவ்வாறு இருந்த போதிலும், இயேசு கூறினார், "அத்தி மரமானது துளிர்விடுவதை நீங்கள் காண்கையில், அந்த ஜாதியினர் மீண்டும் ஒரு தேசமாக மலரும்படி தங்கள் சுயதேசத்திற்கு திரும்பி வருவதை நீங்கள் காண்கையில் நேரமானது வாசல் வரைக்கும் நெருங்கிவிட்டது" என்று.**

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: 60-12-04E **பத்மு தீவு தரிசனம்**

---

243. அதன் பிறகு சீனாய் மலையின் மேல் அந்த இலட்சத்து நாற்பத்தி நாலாயிரம் பேர் கூடி வருகிறார்கள். அங்கே இஸ்ரவேல் ஒரு தேசமாக ஆகிவிட்டது. உலகிலேயே மிகவும் பழமை வாய்ந்த ஜாதியினர் அவர்கள்; உலகிலேயே மிகவும் பழமை வாய்ந்த கொடியையுடையவர்கள் அவர்கள்தான். அவர்களுக்கென சொந்த தேசம், சொந்தக் கொடி, சொந்த இராணுவம், சொந்த நாணயம், மற்றும் யாவும் அவர்களுக்கென உண்டாயிருக்கிறது. ஐக்கிய

நாடுகளின் சபையில் அவர்களுடைய நாடும் ஒரு உறுப்பினராகி விட்டது. ஏனெனில் அவர்களும் ஒரு தேசமாகிவிட்டனர். இவையாவும் நிறைவேறும் வரையிலும் இந்த இஸ்ரவேல் என்னும் ஜாதியினர் ஒழிந்து போவதில்லையென்று இயேசு கூறியிருக்கிறாரே.

244. புறக்கணிப்பின் காலங்களிலே எவ்வாறு புதிய ஏற்பாட்டுச் சபையானது இக்காலங்கள் தோறும் இருந்து வந்துள்ளதோ, அதே நிலையில் காணப்பட்ட இந்த யூதர்களும் எங்கு சென்றாலும் துன்புறுத்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு,

துரத்திவிடப்பட்டு, அலைக்கழிக்கப்பட்டு, தூக்கியெறியப்பட்டு இருந்த நிலையைப் பார்க்கையில் அவர்கள் இன்னும் இருப்பது ஒரு இரகசியமானதாகக் காணப்படுகிறது. இவ்வாறு இருந்த போதிலும், இயேசு கூறினார், "அத்தி மரமானது துளிர்விடுவதை நீங்கள் காண்கையில், அந்த ஜாதியினர் மீண்டும் ஒரு தேசமாக மலரும்படி தங்கள் சுயதேசத்திற்கு திரும்பி வருவதை நீங்கள் காண்கையில் நேரமானது வாசல் வரைக்கும் நெருங்கிவிட்டது" என்று. 'இவையெல்லாம் நிறைவேறும் வரைக்கிலும், இந்த சந்ததி ஒழிந்து

போவதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு கூறினார். இந்த ஜனங்கள் ஒழிந்து போகமாட்டார்கள். ஹிட்லர் அவர்க ளை ஒழித்துக் கட்ட முயற்சித்தான், முஸோலினி இவர்களை கருவறுக்க முயற்சித்தான். ஸ்டாலின் இவர்களை சர்வ நாசம் செய்ய முயற்சித்தான். மற்றும் பலரும் முயன்றனர். ஆனால் இவர்கள் ஒழித்துக்கட்டப்பட முடியாதவர்கள், தேசமாக மலர்ந்திடுவார்கள். ஆமென்!

“உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்,” பாருங்கள். நாம் அழைக்கப்பட்டோமா என்று வியந்துகொண்டிருக்க நாம் விரும்பவில்லை. நீங்கள் அழைக்கப்பட்டிருக்க வேண்டும் இல்லையெனில் நீங்கள் தோற்கடிக்கப்படுவீர்கள், நாம் ஒரு போரில் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம்.

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61–0112 — கேள்விகளும் பதில்களும்

**107.** சகோதரன் பிரான்ஹாமே, இந்த கேள்விகள் முறைப்படி இல்லாமற்போனால், அவைகளைத் தள்ளிவிடுங்கள், மேலும் அதைக் குறித்து நான் மோசமாக நினைக்கமாட்டேன், ஏனென்றால் அது கர்த்தருடைய கரம் அல்லவென்று நான் அறிந்துகொள்வேன். கேள்வி எண் ஒன்று: சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்... அதாவது அது—திரும்ப வர வேண்டும்—வேண்டும்... நான் ஊழியத்துக்கு மீண்டும் வரவேண்டுமென்று நீங்கள் சொல்வதை நான் —நான்—நான் கேட்டிருக்கிறேன், நானே அதன் பேரில் சிந்தனை செய்து, அதைக் குறித்து அவரிடத்திலிருந்து திட்டவட்டமான வார்த்தையைப் பெறுவதற்காக காத்துக்கொண் டிருக்கிறேன். ஆனால் இந்நாள் வரைக்கும் அது வரவேயில்லை. இப்பொழுது, முடிவு மிகவும்

**அருகில் உள்ளதென்று நான் அறிந்துள்ளபடியால், கர்த்தராகிய இயேசு என்னிடம் பேசுவதற்கு நான் இன்னும் காத்திருக்க வேண்டுமா? அல்லது, நீங்கள் இந்நாளில் அவருடைய சார்பில் பேசும் பேச்சாளராக இருப்பதால், என்னிடம் என்ன கூறவேண்டுமென்று உங்களிடம் கூற அவர் பிரியப்படுவாரா?**

**27** சரி, இப்பொழுது, சகோதரனே, நான்...நான் அதற்கான என்னுடைய பதிலை இங்கு எழுதி வைத்துள்ளேன். தேவன் இந்த சகோதரனை அழைத்தல், வாழ்க்கையில் ஒரு அழைப்பு, இப்பொழுது, அந்த ஒரு மகத்தான காரியத்தை நாம் ஒரு பொருளாக எடுத்துக் கொண்டு, இரவு முழுவதும் அதன் பேரில் பிரசங்கிக்கலாம், பாருங்கள், "ஒரு அழைப்பு" என்ற அந்த ஒரு காரியம். "உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்," பாருங்கள். நாம் அழைக்கப்பட்டோமா என்று வியந்துகொண்டிருக்க நாம் விரும்பவில்லை. நீங்கள் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்

இல்லையெனில் நீங்கள் தோற்கடிக்கப்படுவீர் கள், நாம் ஒரு போரில் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். புரிகிறதா? சகோதரனே, உங்களுடைய அழைப்பு தேவனிடத்திலிருந்து வந்துள்ளதென்றும், ஒரு வேலையைச் செய்ய நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றும், நீங்கள் முற்றிலும் நிச்சயமுடையவர் களாயிருந்தால்...

**28** இப்பொழுது, சத்துரு உங்கள்மேல் அங்கே ஒரு சூழ்ச்சியைக் கையாளட முடியும். அதாவது நீங்கள் உண்மையில் அழைக்கப் பட்டிருக்கையில், நீங்கள் அழைக்கப்பட்டிருக்க வில்லை என்று நினைக்கும்படி அவனால் செய்ய முடியும், அதன்பின்னர் நீங்கள் அழைக்கப்படாதிருக்கையில், நீங்கள் அழைக்கப் பட்டுள்ளதாக நினைக்கும்படி செய்ய முடியும்; இல்லையென்றால் நீங்கள் அழைக்கப்படா திருக்கையில், நீங்கள்—நீங்கள் அழைக்கப் பட்டுள்ளதாக நினைக்கும்படி செய்ய முடியும்; நேர்மாறாக, இரண்டில் ஒரு வழி. எனவே நீங்கள் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

**29** இப்பொழுது, இதைச் செய்ய வேண்டிய முறை இதுவே. முதலாவது கண்டுபிடியுங்கள்... பாருங்கள், இப்பொழுது, இது ஆலோசனையாயுள்ளது, இதன் பேரில் நான் அளிக்கக் கூடிய ஒரே காரியம் ஆலோசனையேயாகும். புரிகிறதா? ஆனால் உங்களுடைய அழைப்பு தேவனிடத்திலிருந்து வருகிறது என்பதை உறுதியாக்கிக் கொள்ளுங்கள், அதன் பிறகு உங்கள் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் பரிசீலனை செய்து பாருங்கள். புரிகிறதா? இப்பொழுது, அதன் மூலம் நான் என்ன அர்த்தத்தில் கூறுகிறேன் என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் பிரசங்கம் செய்வதற்கான உங்களுடைய நோக்கம் என்ன? அது வெறும்... இப்பொழுது உங்களுக்கு உள்ள வேலையைக் காட்டிலும் அது எளிதான வேலை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் அதை மறந்துவிடுங்கள், அது ஒரு அழைப்பு அல்ல.

**30** ஒரு தேவனுடைய அழைப்பு உங்கள் இருதயத்தை மிகவும் அனல் மூட்டிக் கொண்

டேயிருப்பதால், உங்களால் அதற்காக இரவும் பகலும் இளைப்பாறவே முடியாது. அதிலிருந்து நீங்கள் விலகவே முடியாது, அது உங்களை தொடர்ந்து உறுத்திக் கொண்டேயிருக்கும்.

**31** மேலும்—மேலும் நீங்கள் பிரசங்கிக்க வேண்டுமானால்... பாருங்கள், இப்பொழுது, உங்களுக்கு வேறொரு நோக்கமும் இருக்கக் கூடும், “இப்பொழுது எனக்குள்ள வேலையைக் காட்டிலும், நான் வெற்றிகரமாக சுவிசேஷ கனுடைய அல்லது மேய்ப்பனுடைய வேலையைச் செய்து, எனக்கு ஒரு நல்ல சம்பளமும், ஒரு நல்ல வீடு போன்றது கிடைக்கப் பெற்று வாழ நேரிட்டால், அப்பொழுது அது ஒரு நல்ல காரியமாயிருக்கும் என்றும், இப்பொழுது நான் செய்துகொண்டிருக்கின்ற வேலையைக் காட்டிலும் அது எளிதாக இருக்கும் என்றும் நான்—நான் நினைக்கிறேன். மேலும் அது உண்மையிலேயே அவ்விதம் இருக்கும்...” என்று நீங்கள் கூறலாம். இப்பொழுது, பாருங்கள், துவக்கத்திலேயே உங்கள் குறிக்கோள் தவறானது. பாருங்கள், அது

சரியல்ல. புரிகிறதா? நீங்கள்—நீங்கள் அதன்பேரில் அங்கே தவறாயிருக்கிறீர்கள்.

**32** அப்பொழுது நீங்கள், “பாருங்கள், ஒருவேளை அதனால் நான் ஒரு...ஜனங்களின் மத்தியில் பிரபலம் வாய்ந்தவனாக இருப்பேன் என்று நினைக்கிறேன்” என்று கூறலாம். பாருங்கள், அப்படியானால் நீங்கள் ஒரு பெரிய தோல்விக்கு ஆயத்தமாயிருப்பதை நீங்கள் கண்டறிவீர்கள். உண்மையாக, பாருங்கள்!

**33** ஆனால், இப்பொழுது, உங்களுடைய குறிக்கோள், “நான் மலிவு பிஸ்கோத்துக் களைத் தின்று, ஓடைத் தண்ணீரைக் குடிக்க நேரிட்டாலும் எனக்கு கவலையில்லை” என்றிருக்குமானால் நல்லது. உங்களில் ஏதோ ஒன்று கிழித்து, “நான் சுவிசேஷத்தைப் பிரசங் கிப்பேன் அல்லது மரிப்பேன்” என்று கூறினால் நல்லதே! புரிகிறதா? அப்பொழுது நீங்கள்—நீங்கள் எங்காவது செல்வீர்கள், ஏனெனில் தேவன் உங்களுடன் ஈடுபடுகிறார். தேவன் உங்களுக்கு தம்மை வெளிப்படுத்திக் கொண் டிருக்கிறார், ஏனெனில் அது தேவன் உங்களை

இளைப்பாறவிடாமலிருப்பதாகும். மேலும், வழக்கமாக, தேவனால் அழைக்கப்பட்ட ஒரு மனிதன் அதைச் செய்ய ஒருபோதும் விரும்பு கிறதில்லை. அதை நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? எந்த மனிதனும்...

**34** அண்மையில் மிகவும் விலையேறப் பெற்ற சில சகோதரர்களால் என்னிடம், "சகோ தரன் பிரான்ஹாமே, நாங்கள் இப்பொழுது சத்தியத்தின் வழியில் வந்துவிட்டபடியால், நாங்கள் இப்பொழுது கர்த்தரைக் கண்டடைந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டபடியால், நாங்கள் செய்ய வேண்டிய ஊழியத்திற்காக வரங்களை நாடலாமா" என்று கேட்கப்பட்டது.

**35** அப்பொழுது நான், "அவ்விதம் ஒருபோதும் செய்யாதீர்கள்" என்றேன். புரிகிறதா? அவ்விதம் ஏதாவதொன்றைச் செய்ய மக்களுக்கு ஆலோசனை கூறாதீர்கள், ஏனெனில் அதைச் செய்ய விரும்பும் ஒரு நபர் வழக்கமாக அதைச்—அதைச் செய்ய முடியாத வனாயிருப்பான்.

**36** அதைவிட்டு ஓடிப் போக முயற்சி செய்யும் ஒரு மனிதனையே தேவன் உபயோகிக்கிறார். புரிகிறதா? அவன் அதை விட்டு ஓடிப் போக முயன்று, “ஓ, சகோதரனே, நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நான்...அழைப்பு எனக்குள் உள்ளது, ஆனால் நான்...வ்யூ! மனிதனே, அதைச் செய்ய எனக்கு பிரியமில்லை” என்பவனே. பாருங்கள், அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது, நீங்கள் பாருங்கள். அதாவது—ஓடிப் போக முயல்கிறவனே.

**37** அவன்—அவன் அதை எப்படியாவது செய்ய வேண்டுமென்று நினைத்தால், முதலாவதாக அவன் “பெருமைகொண்ட” ஒருவனாக தன்னைக் காண்பிக்கிறதை நீங்கள் அறிந்து கொள்ளுகிறீர்கள். நீங்கள், “தேவனே, நீர் மலைகளை அசைக்கத்தக்கதாக எனக்கு வல்லமையை அளிப்பீராக, நான் உமக்குச் சொல்லுகிறேன், மலைகளை அசைக்க என்னை நீர் அனுமதிப்பீரானால், உமக்காக நான் ஏதாவதொன்றைச் செய்வேன்” என்று கூறுவது போலாகும். இல்லை, அவன் ஒன்றுமே செய்ய

மாட்டான், அவன் சரியான மனப்பான்மைக்கே தன்னை செயல்படுத்திக்கொள்ள முடியாது, பாருங்கள், எனவே அவன் தேவனுக்காக மலைகளை ஒருபோதும் அசைக்கவே முடியாது.

**38** பவுலை, உதாரணமாக, எடுத்துக் கொள்ளுங்கள். பவுல் தன் அழைப்பை விட்டு விலகிக்கொண்டிருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஓ, சகோதரனே! அவனால் அதை செய்திருக்கவே முடியாது. அது அவனை இரவும் பகலும் உறுத்திக் கொண்டேயிருந்த படியால், அவன் தன் சபையை விட்டுவிட்டு, எல்லாவற்றையும் விட்டுவிட்டு, மேலும்—மேலும் புறப்பட்டு சென்றுவிட்டான்...ஆசியாவுக்குச் சென்றான் என்று நான் நினைக்கிறேன், இல்லையா? அது சரியா தவறா என்றும், தேவன் அவனை உண்மையில் அழைத்திருக்கி றாரா என்பதையும் கண்டுகொள்ள, அவன் அங்கு மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து வேதத்தை ஆராய்ந்து பார்த்தான்.

**39** சகோதரனே, எனவே தேவன் உங்களை அழைத்துக்கொண்டிருப்பாரானால், அது

உங்கள் இருதயத்தை உறுத்திக்கொண்டேயிருக்கும், அப்படி இருக்குமானால் நான், “பாரமான யாவற்றையும், உங்களை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிடுங்கள்” என்பேன். உங்களுக்குப் புரிகிறதா? ஒருவேளை...ஆனால் அது உங்களை உறுத்திக்கொண்டிருக்கவில்லையென்றால், அப்பொழுது அதைக் குறித்து நான்—நான்—நான் மிகப் பெரிதாக எண்ணமாட்டேன். அது அப்படியே அதனுடைய ஸ்தானத்திற்கு வரட்டும்.

இப்பொழுது, அவர் கூறினார், இந்த சகோதரன் இங்கே கூறினார்:

**சகோதரன் பிரான்ஹாம், வேண்டுமா... தேவன் பேசுவார் என்று நீர் நினைக்கிறீரா...**(அவரிடம் சொல்லும்படி என்னிடம்.)

**40** தேவன் அவரிடம் நேரடியாக பேசுவார் என்றே நான் நினைக்கிறேன். ஏனெனில், உங்களுக்குத் தெரியுமா, தேவன்...அவர் நம்மிடம் பேசும்படிக்கு நாம் அவ்வளவு பெரியவர்கள் அல்ல. அவர்—அவர்—அவர்

நம்மிடம் பேசுவார், சரி. பாருங்கள், அவர்...அவர் நம்மிடம் பேசுவார்.

**41** நான் இதை உங்களிடம் சொல்கிறேன், தேவன் என்னிடம் அதைக் கூறுவாரானால், அப்பொழுது அந்த சகோதரன், “பாருங்கள், தேவன் சகோதரன் பிரான்ஹாமிடம் அவ்விதம் கூறினார், தேவனுக்கு ஸ்தோத்திரம்!” என்று கூறலாம்.

**42** ஆனால், நீங்கள் பாருங்கள், உங்களுக்கு அழைப்பைக் கொடுப்பது சகோதரன் பிரான்ஹாம் அல்ல, அது கர்த்தராகிய இயேசுவே உங்களுக்கு அழைப்பைக் கொடுக்கிறார். புரிகிறதா? உங்களுக்கு அழைப்பைக் கொடுப்பது கர்த்தராகிய இயேசுவானால், அவரே பேசுவார். புரிகிறதா? நான் உங்களிடத்தில் உங்களுடைய செவிகளில் பேசலாம், ஆனால் கிறிஸ்து உங்களை ஊழியத்துக்கு அழைக்கும்போது, அது உங்களுடைய இருதயத்தில் உள்ளது. புரிகிறதா? அங்குதான் அது நங்கூரமிடப்பட வேண்டும், அதிலிருந்து நீங்கள் விலகிச் செல்லவே முடியாது.

இப்பொழுது, நான் நினைக்கிறேன் இரண்டாம் கேள்வியின் பேரில்...

**43** இப்பொழுது, அதன் பேரில் ஏதாகிலும் கேள்வி இருக்குமானால், அதற்கு ஏதாவது கேள்வி இருக்குமானால், பாருங்கள், அதாவது ஒரு மனிதனின் அழைப்பு தேவனிடத்திலிருந்து வந்து, அவனுடைய இருதயத்தில் இருக்க வேண்டும். மேலும்—மேலும் வேறொரு சகோதரன்...ஓ, இதை எழுதினது யார் என்று எனக்குத் தெரியும். பாருங்கள், அதை எழுதினது யார் என்று எனக்குத் தெரியும், அது ஒரு விலையேறப்பெற்ற, அருமையான, அந்த கருணையுள்ள சகோதரனுக்கு தேவனுடைய ஒரு அழைப்பு உள்ளதென்று நான் உண்மை யாகவே விசுவாசிக்கிறேன். ஆனால் நான்... ஆனால் நான் கூறுவதன் பேரில் அவர் அதைச் செய்வதை நான் விரும்பமாட்டேன் (அதன் காரணமாகத் தான் நான் இவ்விதம் அதற்கு விடையளித்தேன்), பாருங்கள், “பாருங்கள், ஆம், சகோதரன் *இன்னார்–இன்னார்* ஊழியத்

துக்குச் செல்ல வேண்டும்” என்று நான் கூறுவதன் பேரில். புரிகிறதா?

**44** இப்பொழுது நீங்கள், “நான் அதைச் செய்ய வேண்டும் என்று சகோதரன் பிரான்ஹாம் என்னிடம் கூறினார்” என்பீர்கள். பாருங்கள், ஒருகால் சகோதரன் பிரான்ஹா முக்கு ஏதாகிலும் சம்பவித்து, நான் கொல்லப் பட்டேன், அல்லது மரித்துப்போனேன், அல்லது—அல்லது விலகிவிட்டேன் என்றால் என்னவாகும்? அப்பொழுது, பாருங்கள், உங்கள் அழைப்பு அப்பொழுது முடிந்துவிடும். ஆனால் இயேசு உங்களை அழைப்பாரானால், சகோதரனே, நித்தியம் என்று ஒன்று உள்ள வரைக்கும், அது ஒலித்துக்கொண்டேயிருக்கும். புரிகிறதா? அப்பொழுது நீங்கள் எங்கு நின்றுகொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

இப்பொழுது இரண்டாம்...

**45** இல்லையென்றால் இப்படி ஏதோ ஒன்று, “இது கடைசி நாட்கள் என்று நான்

அறிந்துள்ளதால்." அதைக் குறித்து அந்த சகோதரனை நான் நிச்சயமாகவே பாராட்டு கிறேன். நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம் என்பதை அந்த சகோதரன் உணர்ந்துள்ள தைக் குறித்தும் கிறிஸ்துவுக்காக ஏதாவதொன் றைச் செய்ய வேண்டுமெனும், அவருடைய இருதயத்தின் உத்தமத்தைக் குறித்தும் நான் நிச்சயம் அவரைப் பாராட்டுகிறேன்.

## 61–0112 — கேள்விகளும் பதில்களும்

Rev. William Marrion Branham

---

எனவே இப்பொழுது, அவர் [தேவன்] யாரிடத்தில் அதிகமாக – அதிகமாக அக்கறை கொள்வார், அவருடைய பணத்திலா அல்லது அவருடைய மனிதனிடமா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-02-16 மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும் #1

---

4. ஒருசமயம் பால்ராடார் அவர்களை நான் நினைவு கூருகிறேன்... எத்தனை பேர் எப்பொழுதாவது அவரைக் குறித்து அறிந்து வைத்திருக்கிறீர்கள்? நிச்சயமாக, பால்ராடார் தேவனுடைய ஒரு மகத்தான மனிதராக இருந்தார்.

அவர் ஒரு சமயம் சிறு கதையொன்றை கூறினார், அவர் வேறொரு மனிதரோடு ஒரு இரயில் வண்டியில் போய்க் கொண்டிருந்ததாகக் கூறினார், மேலும் அவர் கூறியதாவது: இந்த மனிதர் அவரிடம் திரும்பி வர முயற்சித்தாராம், ஏனெனில் அவர் அந்த இரவில் இரயிலிலிருந்த ஒரு உறங்கும் பெட்டியில் (pullman) உறங்கினாராம்.

அடுத்த நாள் காலையில் காலை உணவின் போது, ஒரு ஊழியக்கார குழு எங்கோ நடக்கும் ஒரு கன்வென்ஷன் கூட்டத்துக்காக போய்க் கொண்டிருந் தனராம்.

எனவே இம்மனிதன் சரியாக பால் அவர்களுக்கு அடுத்ததாக உட்கார்ந்த வாறு, "நல்லது, தேவனுக்குத் துதி உண்டாவதாக" என்றாராம். "நான் கடந்த இரவில் சாய்விருக்கைகள் இருந்த ஒரு இரயில் பெட்டியில் இருந்ததால், கர்த்தருக் காக கொஞ்சம் பணத்தை சேமித்தேன்" என்றார்.

பால் அவர்களோ, "தேவனுக்குத் துதி உண்டாவதாக, உறங்குவதற்கான இரயில் பெட்டியில் பயணம் செய்ததால், கர்த்த ருடைய மனிதனைக் காப்பாற்றினேன்" என்றார்.

எனவே இப்பொழுது, அவர் (தேவன்) யாரிடத்தில் அதிகமாக - அதிகமாக அக்கறை கொள்வார், அவருடைய பணத்திலா அல்லது அவருடைய மனிதனிடமா? எப்போதுமே அவருடைய மனிதனிடத்தில் தான் அவர் அக்கறை கொள்கிறார். நாம் அதற்காக மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறோம்.



# பிரபல அமெரிக்க நடிகையான மார்லின் மன்றோவின் மரணத்தைக் குறித்த தரிசனம் நிறைவேறுதல்



மார்லின் மன்றோ

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: வேறொருவரால் விளையும் பாதிப்பு, அக்டோபர் 13, 1962, பத்தி எண் 52-56

சில வாரங்களுக்கு முன்பு நான் மலைக்குச் சென்றிருந்தேன். நான் வீடு திரும்பும்போது நாங்கள் (நானும் என் குடும்பமும்) சிறிது இளைப்பாற அங்கு சென்றிருந்தோம். கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த வாரம் மீண்டும் அங்கு செல்வோம்.

**அங்கு ஒரு இரவு நான் தரிசனம் கண்டேன். அந்த தரிசனத்தில் ஒரு அழகான பெண் ஓடுவதைக் கண்டேன். அவள் கையை இங்கு வைத்திருந்தாள். அவள் விழுந்து மரித்துப் போனாள்.**

**கர்த்தருடைய தூதன் என்னிடம், "இதை குறித்து நீ கேள்விப்படும்போது, அவள் தற்கொலை செய்து கொண்டதாக அவர்கள் கூறுவார்கள். ஆனால் அவள் மாரடைப்பினால் இறந்தாள். இப்பொழுது ஏறக்குறைய 4.00 மணி. நீ 4 மணி என்று சொல்" என்று சொல்லி, என்னை விட்டுப் போய்விட்டார்.**

அந்த மாட்டு முகாமில் தங்கியிருந்த என் குடும்பத்தை (மாடு மேய்ப்பவர் தங்குமிடம், அங்கு தான் நாங்கள் புல்மேயும் மாடுகளை வளைத்து ஓட்டிக் கொண்டு வருவது வழக்கம்) நான் அப்பொழுது எழுப்பவில்லை.

அவர்கள் காலை வரைக்கும் உறங்கும்படி விட்டு விட்டு, அன்று காலை அவர்களிடம், "ஒரு அழகான பெண், மிகக் கவர்ச்சியுள்ளவள் மாரடைப்பினால் இறந்து விடுவாள்" என்றேன்.

இரண்டு நாட்கள் கழித்து நாங்கள் சாலையில் சென்று கொண்டிருந்த போது, வானொலியில், குமாரி (அவள் பெயர் எனக்கு ஞாபகம் வரவில்லை) மன்ரோ, திருமதி மன்ரோ. அது அவள் நடிப்புக்காக வைத்துக் கொண்ட புனைப்பெயர் (stage name) வேறெதோ ஒன்று. அவள் இறந்து போனாள். அவள் தற்கொலை செய்து கொண்டதாக அவர்கள் கூறினர்.

நான் எவ்வளவு கூறினாலும் உபயோகமிராது. அவர்கள் அப்பொழுதும் அவள் தற்கொலை செய்து கொண்டதாகத் தான் கூறுவார்கள்.

ஆனால் அந்த பெண் தற்கொலை செய்து கொள்ளவில்லை. அவள் மாரடைப் பால் இறந்து போனாள்.

நீங்கள் கவனித்திருப்பீர்களானால், அவள் கை - தொலைபேசியின் அருகில்

செல்ல முயன்றாள். தொலைபேசி அவள் கையிலிருந்தது.

அவளுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. தூக்க மாத்திரைகள் அங்கிருந்ததாக அவர் கள் கூறினர். அவள் அந்த மாத்திரைகளை ஒரு மாத காலமாக (பாருங்கள்) அல்லது அதற்கும் அதிகமாக உட்கொண்டு வந்திருக்கிறாள். அவள் மாரடைப்பினால் இறந்து போனாள்.

4 மணி அடிக்க நான்கு அல்லது ஐந்து வினாடிகளுக்கு முன்பு அவள் இறந்து போனாள்.

அவளுடைய வாழ்க்கை வரலாற்றை ஒரு பத்திரிக்கையில் படித்தேன். அவள் எப்படி... அவள் முறை தவறிப் பிறந்தவள்.

அவள் தன் ஜீவனுக்காக பாத்திரங் களைக் கழுவினாள்.

அவளுடைய தாய் பைத்தியக்காரக் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தாள்.

அவள் ஆவல் கொண்டாள் (அவள் உலகிலேயே மிகச் சிறந்த உடலமைப்பை கொண்டிருந்தவள் என்று நினைக்கிறேன்) - **பணத்தால் விலைக்கு வாங்க முடியாத ஏதோ ஒன்றைப் பெற அவள் விழைந்தாள்.**

**"ஓ, அவளை நான் சந்தித்திருந்தால் நலமாயிருக்கும். அவளுடைய தேவை என்னவென்று எனக்குத் தெரியும்" என்று எண்ணினேன்.** பார்த்தீர்களா?

ஒருக்கால் புகழ்பெற்ற, சிறந்த சபை களின் அங்கத்தினர்கள் - எல்லா பளிங்கும் பகட்டும் கொண்ட ஹாலிவுட்... அவர்கள் அப்படிப்பட்டவர்களைக் கண்டுள்ளனர்... அவளைக் காட்டிலும் வித்தியாசமான வாழ்க்கை சபை அங்கத்தினர்கள் வாழ வில்லை என்பதை அவள் கண்டாள்.

உங்கள் வாழ்க்கை மற்றவர்களில் பாதிப்பை உண்டாக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமை ஜனங்களிடையே காணப்பட்ட, மற்றவர்கள் கிறிஸ்துவை தொங்கிக் கொண்டிருக்கும் ஏதோ ஒரு விக்கிரகமாக காணாமல், அவர் பரிசுத்த ஆவியின் ரூபத்தில் இருக்கின்ற ஜீவிக்கின்ற ஒன்றாக அவர், மனத்திருப்தியையும், சந்தோஷத்தையும் அளிக்கிறார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ஓ, அந்த இளம் பெண் இவ்வுலகத்தை விட்டுப் போவதற்கு முன் நாம் மாத்திரம் அவளை சந்தித்திருந்தால் !



**பெண்மணிகளே, நான் இதை மரியாதையுடன் கூறுகிறேன், ஒரு ஸ்திரீயானவள் சமையல் அறையை விட்டு வெளியேறுவாளானால், அவள் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து வெளியே சென்றுவிட்டாள். அது உண்மை. அவள் அந்த இடத்தைச் சார்ந்தவளாகத்தான் இருக்கின்றாள். அதற்கப்பால், அவளுக்கு வேறு இடம் கிடையாது.**

செய்தி: 56-0513 - **மோசேயின் பேரிலான போதனை**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

# கழுகின் சத்தம்



அக்டோபர் 28, 2023

2